DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM
**Spl.Sessions Case No.1/2025**

அ.சா.5

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | பாரதிராஜா | Caste: | |
| Father's Name: | சண்முகம் | Calling: | கூலிவேலை |
| Village: | முத்துவிஜயபுரம் | Religion: | |
| Taluk: | கமுதி | Age: | 32 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 24.11.2025

( 1,3 எதிரிகள் ஆஜர், 2ம் எதிரி ஆஜர் இல்லை .BNSS பிரிவு 355-ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.)

**முதன்மை விசாரணை**

நான் கமுதி தாலுகா முத்துவிஜயபுரம் கிராமத்தில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். எங்கள் ஊரைச் சேர்ந்த சின்னாண்டி மகன் பாண்டி என்பவரை தெரியும். அ.சா.1 ஹரிகிருஷ்ணனை தெரியும். அவரது வயல்களை தெரியும். கடந்த 11.10.2024ம் தேதி காலை 07.00 மணியளவில் நானும் எங்க ஊரை சேர்ந்த பாண்டியும் என்னுடைய வயலில் வேலை செய்துகொண்டிருந்தோம். அப்போது உட்கோட்ட காவல்துணைக் கண்காணிப்பாளர் ஹரிகிருஷ்ணன் வயலுக்கு வந்து பார்வையிட்டு ஹரிகிருஷ்ணன் வயலை சுற்றியுள்ள வயல்கள் யாருக்கு சொந்தமானது என கேட்டார்கள். நானும் பாண்டியும் சொன்னோம். டிஎஸ்பி அந்த இடத்தை படம் வரைந்து அதற்கு ஆதரவாக சாட்சி கையெழுத்து போடும்படி கேட்டார்கள். நானும் பாண்டியும் கையெழுத்து போட்டோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள

முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். 2 வது கையெழுத்து பாண்டியுடையது. பார்வை மகசர் **அ.சா.ஆ.2.** இதுசம்பந்தமாக காவல்துணைக் கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

நான் ஹரிகிருஷ்ணனின் தம்பி என்றால் சரிதான். போலிசார் வந்து பார்த்த இடம் வயலா தோட்டமா என்றால் புஞ்சை. ஹரிகிருஷ்ணன் புஞ்சைக்கு வடக்கே நான் வேலை பார்த்து கொண்டிருந்த என் அப்பாவின் பேரில் உள்ள நிலம் உள்ளது. பாண்டி புஞ்சை எங்கு உள்ளது என்றால் அவர் என்னுடைய வயலில் வேலை பார்க்க வந்திருந்தார். நான் வெளியூரில் வேலை பார்க்கிறேன் என்றால் சரிதான். ஆனால் அந்த சமயத்தில் ஊருக்கு வந்திருந்தேன். வயலில் சென்று விவசாயம் செய்தேன். தற்போது நான் வெளியூரில்தான் வேலை பார்க்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் ஹரிகிருஷ்ணன் புஞ்சைக்கு வந்து பார்வையிட்டபோது எங்களை தவிர ஹரிகிருஷ்ணன் புஞ்சையை சுற்றியுள்ள நிலங்களின் உரிமையாளர்கள், வேலை பார்த்தவர்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். ஹரிகிருஷ்ணன் புஞ்சைக்கு வடக்கே எங்களுக்கு சொந்தமான புஞ்சை எதுவும் இல்லை என்றால் சரியல்ல. பாண்டி என்பவருக்கும் அந்த பகுதியில் எந்த நிலமும் இல்லை என்றால் சரிதான். நான் சம்பவ காலத்தில் சென்னையில் செப்பல் கடையில் வேலை பார்த்தேன். எனக்கு விவசாய வேலை தெரியாது என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் நானோ என் வயலில் பார்த்ததாக சொல்லப்படும் பாண்டியோ எங்கள் வயல் என சொல்லப்படும் இடத்திற்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி, சொன்ன இடத்தில், நேரத்தில் இல்லை என்றும போலிசார் அங்கு வரவில்லை

என்றும் அங்கு வைத்து நானோ பாண்டியோ கையெழுத்து செய்யவில்லை என்றும் நான் ஹரிகிருஷ்ணன் தம்பி என்பதால் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க என் தம்பிக்கு ஆதரவாக கையெழுத்து செய்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் செய்ததாக சொல்லப்படும் கையெழுத்து பின்னிட்டு காவல்நிலையத்தில் வைத்து செய்தேன் என்றால் சரியல்ல.

Sd/-C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED
UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No.1/2025**

அ.சா.6

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | பாண்டி | Caste: | |
| Father's Name: | சின்னுண்டி | Calling: | விவசாயவேலை |
| Village: | முத்துவிஜயபுரம் | Religion: | |
| Taluk: | கமுதி | Age: | 40 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 24.11.2025

( 1,3 எதிரிகள் ஆஜர், 2ம் எதிரி ஆஜர் இல்லை .BNSS பிரிவு 355-ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.)

<u>**முதன்மை விசாரணை**</u>

நான் கமுதி தாலுகா முத்துவிஜயபுரம் கிராமத்தில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். எங்கள் ஊரைச் சேர்ந்த சண்முகம் மகன் பாரதிராஜா என்பவரை தெரியும். அ.சா.1 ஹரிகிருஷ்ணனை தெரியும். கடந்த வருடம் அக்டோபம் மாதம் 11ம் தேதி நான் என் தம்பி உறவுமுறையான பாரதிராஜாவுடன் அவரது வயலுக்கு வேலைக்கு சென்றேன். அன்று காலை 7.00 மணியளவில் கமுதி டிஎஸ்பி ஹரிகிருஷ்ணன் வயலுக்கு வந்து அவரது வயலை சுற்றி யார் யார் வயல்கள் உள்ளது என்று கேட்டார். சொன்னோம். அங்கு படம் வரைந்து அதற்கு ஆதரவாக கையெழுத்து கேட்டார். நானும் பாரதிராஜாவும் கையெழுத்து போட்டோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையதுதான். இதுசம்பந்தமாக காவல்துணைக் கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

நான் விவசாயியா என்றால் ஆமாம். நான் பாரதிராஜா வயலுக்குதான் வேலைக்கு சென்றேன். எத்தனை பேர் பாரதிராஜா வயலில் வேலை பார்த்தோம் என்றால் நானும் பாரதிராஜாவும் மட்டும்தான் வேலை பார்த்தோம். ஒரு வருடத்திற்கு முன்பு பாரதிராஜா சென்னையில் வேலை பார்த்தார் என்றால் சரிதான். என்ன வேலைக்கு சென்றேன் என்றால் நெல்விதைப்பதற்காக சென்றேன். நெல் விதைத்துவிட்டு வரப்பில் உள்ள புற்களை வெட்டினோம். நாங்கள் வரப்பை வெட்டவில்லை, வரப்பில் உள்ள புற்களைதான் வெட்டினோம். அந்த பகுதியில் எனக்கு நிலங்கள் இல்லை என்றால் சரிதான். நான் சொல்லும் வயல் கண்மாய்க்கு உள்ளே உள்ளது என்றால் சரிதான். பிரச்சனை நடந்ததாக சொல்லப்படும் நிலம் சம்பந்தமாக ஹரிகிருஷ்ணனுக்கும் 1ம் எதிரி தசரதனுக்கும் தகராறு இருந்தது என்றால் சரிதான். எனக்கு வயல் என்பதற்கும் தோட்டம் என்பதற்கும் வித்தியாசம் தெரியும் என்றால் சரிதான். நான் வேலை பார்த்த இடம் கண்மாய் நீர்பாசனம் உள்ள நிலம் அல்ல என்றால் சரிதான். நான் வேலைக்கு சென்றதாக சொல்லப்படும் இடத்திற்கு செல்லவில்லை என்பதால்தான் வயலுக்கும் தோட்டத்திற்கும் வித்தியாசம் தெரியவில்லை என்றால் சரியல்ல. ஹரிகிருஷ்ணனும் பாரதிராஜாவும் எனக்கு உறவுக்காரர்கள் என்பதால் அவருக்கு ஆதரவாக சாடசியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில், சொன்ன இடத்தில், நேரத்தில் வேலைக்கு வரவில்லை என்றால் சரியல்ல, போலிசார்

கேட்டுக்கொண்டதற்கிணங்க பின்னிட்டு காவல்நிலையத்தில் கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல.

Sd/-C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)